3. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

(ஆ) மதுராந்தகம் நகராட்சி நிறைவேற்றியுள்ள தீர்மானம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை.

25-4-89 அன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பூவராகன் அவர்கள் 25-3-89 அன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சி குறித்தும், பேரவைத் தலைவர் நடவடிக்கை குறித்தும் மதுராந்தகம் நகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது அவை உரிமை மீறிய செயல் ஆகும் எனக் கூறி இப்பிரச்சினையை உரிமைக்குழுவிற்கு அனுப்பிவைக்கும்படி அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

மேலும் இதுகுறித்து அவையிலும் பேசியிருக்கிறார்.

இதுகுறித்து அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகங்கள் துறை அவர்களிடமிருந்து விளக்கம் கேட்டதில் 20-4-1989 அன்று நடைபெற்ற நகரமன்றக் கூட்டத்தில் இதுகுறித்து ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இந்தப் பிரச்சினையில் அவை உரிமை மீறல் இருப்பதாகக் கருதுகிறேன்.

எனவே, பேரவை விதி 226-ன் கீழ் இப்பிரச்சினையை ஆய்ந்து, பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்காக இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி

(ஈ) உள்ளாட்சி மன்ற அதிகாரங்களை விரிவாக்கம் செய்வது குறித்து விவாதிக்க டெல்லியில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்பது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். முக்கியமான பிரச்சினையை எழுப்பக்கூடிய வாய்ப்புகள் முன் அனுமதி பெறுவது என்பது இப்போது நடைமுறையில் உள்ளது. ஆனால் நம்முடைய பழைய மரபிற்கு ஏற்ப முக்கியமான பிரச்சினைகள் அவ்வப்போது ஏற்படுகிற அவசரத்தை

உத்தேசித்து எழுப்பப்படுவதாகும். எனவே, இரண்டு விதத்திலும் எழுப்பலாம் என்று தாங்கள் அண்மையில் ஒரு தீர்ப்புக் கூறியிருக்கிறீர்கள். நான் ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்ப நினைத்தேன். அதைத் தாங்கள் தடுக்கிறீர்கள். அது தங்களுடைய உரிமை. எனக்கு இந்த வாய்ப்புக் கொடுக்கப்படுமா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி மீண்டும் அவை அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்வோம் என்பதை இப்போது என்னுடைய தீர்ப்பாக அளித்து, இப்போது உங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து..

திரு. எம் அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்ததன் பேரில் ஒரு முக்கியமான பிரச்சினையை நான் எழுப்புகிறேன். இன்றையதினம் அரசமைப்புச் சட்டம் மாற்றப் படக்கூடிய அளவிற்கு உள்ளாட்சி அமைப்புகள் சட்டமன்றம் வகிக்கக்கூடிய அதிகாரங்களைப் போல அவைகள் வகிக்கக்கூடிய அளவிற்கு அரசியல் சட்டம் திருத்தப்படும் என்று திரு. மாதவ ராவ் சோலங்கி அவர்கள் நேற்றையதினம் டெல்லியில் பேசியிருக்கிறார்கள். இதுகுறித்து உள்ளாட்கித் துறை, பஞ்சாயத்து ராஜ் என்று சொல்லக்கூடிய இவைகள் குறித்தும் பாரதூரமான விளைவுகள் ஏற்படுத்தக்கூடிய முடிவுகளை மேற்கொள்ள, அரசியல் சட்டத்தைத் திருத்த நாளையதினம் டெல்லியில் எல்லா மாநில முதலமைச்சர்களையும் பிரதமர் அவர்கள் அழைத்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றக் கூட்டம் இருப்பதாலும் நாளையதினம் நம்முடைய விழா இருப்பதாலும் வரமுடியவில்லை, மாற்றி வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து இருந்தார்கள். ஆனால் இரண்டு தினங்களுக்கு முன்பு திரு. என். டி. இராமாராவ் அவர்கள் அந்தக் கூட்டத்தில் அதனுடைய முக்கியதுவத்தைக் கருதி கலந்து கொள்வதாக அறிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய பிரதமர் அவர்களை வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப அவர்களிடத்திலிருந்து ஏதாவது தகவல் வந்ததா? அப்படி, முக்கியமான இந்த கூட்டம் நடக்கும்போது அதை ஓரிரு தினங்கள் மாற்றி வைக்க

வேண்டுமென்று அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப மத்திய அரசாங்கம் ஏதாவது தகவல் கொடுத்திருக்கிறதா? ஏனென்றால் இது முக்கியமான பிரச்சினை. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளாமலே, நம்முடைய அபிப்பிராயத்தை அவர்கள் தெரிந்து கொள்ளாமலே ஒரு முடிவு எடுப்பது அவ்வளவு ஏற்புடையது அல்ல. எனவே, இதுகுறித்து மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏதாவது தகவல் வந்திருக்கிறதா, இந்த அரசாங்கத்தினுடைய நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு என்னுடைய கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் திடீரென்று சில விவரங்களைக் கேட்கும்போது அறையிலே தங்களைச் சந்தித்து முன் அனுமதி பெற நேரம் இல்லாமல் போய்விடுகிறது என்று சொன்னார்கள். இது ஒன்றும் திடீரென்று ஏற்பட்டது அல்ல. நேற்றைக்கு முன் தினமே வந்த செய்தி. அதனாலே அவர்களே கூட கொஞ்சம் அலுப்பைப் பார்க்காமல் 8.12 மணி அளவிற்குத் தங்கள் அறைக்கு வந்து திரு. குமரி அனந்தன் அவர்கள் கேட்டதைப் போல, நம்முடைய ஆல்போன்ஸ் அவர்கள் கேட்டதைப் போல, பொன்னம்மாள் அவர்கள் கேட்டதைப் போல, பூவராகன் அவர்கள் கேட்டதைப் போல, அவர்களும் கேட்டிருக்கலாம். ஆனால் அவர் எழுப்பிய பிரச்சினை இப்போது ஏற்பட்டுள்ள இந்த விவாதத்தை விட மிக முக்கியமானது என்ற காரணத்தால் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சி மன்றங்களைப் பற்றி அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் வரக்கூடிய நிலைமை இருப்பதாக மத்திய அமைச்சர் அறிவித்து இருப்பதை அவர் குறிப்பிட்டார். கடந்த 30 ஆம் தேதியன்று தான், 5 ஆம் தேதியன்று முதலமைச்சர்களைக் கூட்டி பிரதமர் யோசிக்க இருக்கிறார் என்ற முறையில் ஒரு 'டெலக்ஸ்' செய்தி வந்தது. அதைத் தொடர்ந்து அதுகுறித்து என்னென்ன விவரங்களைப் பற்றிப் பேச இருக்கிறோம் என்ற செய்தியும் வந்தது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 4

(முற்பகல் 10–30)

நான் உடனடியாக பிரதமருக்கு விவரமாக தந்தியின் மூலமாகத் தெரிவித்தேன். ஐந்தாம் தேதி அன்று ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட சட்டமன்றப் பேரவையினுடைய பொன்விழா இருக்கிற காரணத்தால் வர இயலாது என்றும், மிக முக்கியமான மானியக் கோரிக்கைகள், எல்லாமே நான் பதில் சொல்லவேண்டிய கோரிக்கைகளாக, மானியக் கோரிக்கைகளாக இருக்கிற காரணத்தால், முன்கூட்டி அறிவிக்கப்படாத சூழ்நிலையில் வர இயலவில்லை என்றும் அதுமாத்திரம் அல்லாமல் நீங்கள் அனுப்பியிருக்கிற விவரங்களைப் பார்க்கும் போது, அதை அமைச்சரவைக் கூட்டத்திலாவது விவாதித்து அதற்குப் பிறகு தங்களோடு கலந்து பேசுவதுதான் சிலாக்கியமானதாக இருக்கும் என்றும், இந்த முக்கியமான விஷயத்திலே, இவ்வளவு அவசரப்படக்கூடாது என்றும், எனவே தேதியை ஒத்திவைக்கவேண்டும் என்றும் நான் ஒரு வேண்டுகோளாக ஒரு டெலக்ஸ் தந்தியை பிரதமர் அவர்களுக்கு அனுப்பி இருந்தேன். ஆனால் அவர்கள் தேதியை மாற்றுவதாகத் தெரியவில்லை. நேற்றுக் காலையில், திருமதி ஷீலா தீட்சித் அவர்கள் பிரதமருடைய அலுவலகத்திலேயிருந்து தொலைபேசியிலே என்னோடு தொடர்பு கொண்டார்கள். அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சர் வர இயலாவிட்டாலும்கூட, முதலமைச்சருடைய பிரதிநிதியாக ஒருவரை அனுப்பிவைக்க வேண்டும் என்று பிரதமர் விரும்புவதாக அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு நானும் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் கலந்து பேசி, ஐந்தாம் தேதி நடைபெறுகிற அந்த முதலமைச்சர்களுடைய மாநாட்டுக்கு தமிழக அரசின் சார்பில் நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லவும், இந்த அரசியல் சட்டத் திருத்தத்தால் மாநில உரிமைகள் பாதிக்கப்படுமேயானால், அவைகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய அளவிற்கு நம்முடைய எண்ணங்களை அங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறவும் இந்த அரசின் சார்பில் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்களை அனுப்புவது என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் இன்றைக்குப் புறப்பட்டுச் செல்கிறார்கள். நாளைக்கு அந்த மாநாட்டிலே அவர்கள் கலந்து கொள்கிறார்

கள். நாம் அங்கே எடுத்து வைக்கிற கருத்து, மாநில உரிமைகள் பாதிக்கப்படாத அளவிற்கு இருக்கவேண்டும் என்ற அந்தக் கருத்தாகத்தான் அமையும் என்பதை நான் நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு விளக்கமாக அளிக்கிறேன்.

(உ) பேரவைத் தலைவரின் தீர்ப்பை விமர்சிக்கும் வகையில் மதுராந்தகம் நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது பிரச்சினை பற்றி உரிமைக் குழுவிற்கு அனுப்பியுள்ளது குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய அதிகாரத்திலே குறுக்கிட்டதாக என்னைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். உங்களுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. அதிலே நான் உள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால் இங்கே, உகம்சந்த் அவர்களுடைய சகோதரர் சேர்மனாக இருக்கிற அந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். அதை அனுப்புவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடு). அதிலே கான்ட்ரோவர்சி இருக்கிறது. (குறுக்கீடு). அதை அனுப்புவதும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தொடரே தவறு. மதுராந்தகம் நகராட்சி. அதிலே யாருடைய சகோதரர் என்பது அல்ல பேச்சு.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மதுராந்தகம் நகரமன்றத்தினுடைய தீர்மானத்தின் மீது உரிமைக் குழுவிற்கு அனுப்புவதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அது உரிமைக் குழுவிற்குப் போவதும், போகாததும் உங்களுடைய முடிவு. ஆனால் நான் மாண்புமிகு பேரவைத் தலைவருக்குச் சொல்லிக் கொள்வது எல்லாம், மதுராந்தகம் நகராட்சியிலே அரசாங்கத்திற்கு போட்டோக்களை வெளியிடுங்கள் என்று ஒரு ரெக்கொஸ்ட், அதாவது வேண்டுகோளாகத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, வற்புறுத்தவோ அல்லது நீங்கள் செய்யவில்லை என்றால், போராட்டம் நடத்துவோம் என்று சொல்லியோ, எந்தவிதமான இதுவும் இல்லை. அப்படி